தினத்தந்தி Date : 27/6/2022 P.No : 4



நிகழ்ச்சியில் திருச்சி தேசிய தொழில் நுட்பக் கழக திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சி துறை டீன் துரை செல்வம், கோவை ஸ்ரீஈஸ்வர் பொறியியல் கல்லூரி ஆராய்ச்சித்துறை தலைவர் கருப்புசாமி ஆகியோர் கலந்து கொண்ட போது எடுத்த படம்.

### திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்துடன்

## ஸ்ரீ ஈஸ்வர் பொறியியல் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்

கிணத்துக்கடவு,ஜூன்.27–

கோவை ஸ்ரீ ஈஸ்வர் பொறியியல் கல்லூரி, திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சி திருச்சி தேசிய தொழில்நுட்ப கழக வளாகத்தில் நடைபெற்றது. இதில், திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகம் சார்பாக திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சி துறை டீன் பேராசிரியர் துரை செல்வம், எந்திரவியல் துறை பேராசிரியர் அனந்தகிருஷ்ணன் மற்றும் ஸ்ரீஈஸ்வர் பொறியியல் கல்லூரி ஆராய்ச்சித்துறை தலைவர் கருப்புசாமி, டீன் பேராசிரியை நிர்மலா, தொழில்துறை நல்லுறவு டீன் கண்ணன் நரசிம்மன், துறை பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதன் மூலம் திருச்சி தேசிய தொழில்நுட்ப கழக எந்திரவியல் துறையில் உள்ள அதிநவீன ஆய்வுகூடங்களை ஸ்ரீ ஈஸ்வர் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கும், புதிய கருவிகளை வடிவமைக்கவும் பயன்படுத்தி கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது. இந்த அதி நவீன ஆய்வு கூடத்தில் கருவிகளை வடிவமைக்க 3டி பிரிண்டர், அனைத்து உலோகங்களிலும் பயன்படுத்தக்கூடிய லேசர் கட்டிங் எந்திரம், வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ப்ராடக்ட்களை சோதனை செய்யும் எந்திரங்கள், பல தரப்பட்ட ரோபோக்கள், ஐ.ஓ.டி சம்பந்தமான அமைப்புகள் ஆகியவை இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.